**அரசுத் தேர்வுகள் இயக்ககம்– சென்னை–6.**

**மேனிலைத்தேர்வு (இரண்டாமாண்டு) மார்ச்சு –2018.**

**பகுதி –1**

**தமிழ் இரண்டாம் தாள் விடைக்குறிப்பு**

விடைத்தாள் திருத்தும்போது கீழே குறிப்பிட்டுள்ள வழிமுறைகளைத் தவறாது பின்பற்றுதல் வேண்டும்.

1. நீலம் மற்றும் கருப்பு மையினால் எழுதப்பட்டுள்ள விடைகள் மட்டுமே மதிப்பீடு செய்தல் வேண்டும்.

2. விடைகள் சொந்த நடையில் தெளிவாக அமைந்து தொடர்பிழை, சொற்பிழை, எழுத்துப் பிழை, ஒற்றுப் பிழை, குறியீட்டுப்பிழை, இலக்கணப் பிழையின்றி இருப்பின் முழுமதிப்பெண் வழங்குதல் வேண்டும்.

3. எழுத்துப் பிழை, ஒற்றுப் பிழை, இலக்கணப் பிழை ஒவ்வொன்றிற்கும் கால் மதிப்பெண் வீதம் குறைத்து அவ்வாறு குறைக்கும் மதிப்பெண் எக்காரணம் கொண்டும் வினாவிற்குரிய மதிப்பெண்ணில் நான்கில் ஒரு பங்கிற்கு மேல் மிகாமல் இருக்க வேண்டும்.

4. தவறான விடைகளை ( X) குறியிட்டும், தொடர் பிழைகளை அடிக்கோடிட்டும், ஒற்றுப் பிழைகளை ( ^ ) குறியிட்டுக் காட்டியும் விதிப்படி அவற்றிற்குரிய மதிப்பெண்களைக் குறைத்தல் வேண்டும்.

5. மதிப்பெண் வழங்குகின்ற ஒவ்வொரு சரியான கருத்திற்கும் தனித்தனியே ( √ ) குறியிடுதல் வேண்டும்.

6. மிகையான விடையிருப்பின் 'மிகை' என்று குறிப்பிட்டு அடித்தல் வேண்டும்.

7. ஒரே விடை மீண்டும் எழுதப்பட்டிருப்பின் 'மீண்டும்' என்று குறிப்பிட்டு அடித்தல் வேண்டும்.

| | | 3x4=12 |
|---|---|---|
| I | எவையேனும் மூன்றிற்கு மட்டும் | |
| 1. | <u>தமிழ் மக்களைப் பரிதிமாற் கலைஞர் கடிந்துரைத்தல்</u><br>1. ஆங்கிலம் கற்ற தமிழ் மக்கள் தமிழைப் படிக்க வேண்டுவது அவசியமன்று என்பர்.<br>2. தமிழ் கற்க வேண்டாமென்பது அறியாமையோடு கூடிய துணிந்துரை.<br>3. தாய்மொழிப் பற்றும் தாய்நாட்டுப் பற்றும் உடைய ஆங்கிலேயர் இவர்களை மதியார்.<br>4. ஆங்கிலம் போன்ற பிறமொழிகளைக் கற்றவர்கள் தமிழ் மொழியின் மீது ஆர்வம் கொண்டு தமிழைக் கற்றனர்; மொழி பெயர்த்தனர்.<br>5. தமிழ்க் கல்வி அவசியம் அன்று என்பார்க்குப் புத்திவரட்டும். | 4 |
| 2. | <u>சமரசம் பரவாமை</u><br>1. உலகில் சமரசம் பரவாமைக்குக் காரணம் பலபடக் கூறலாம்<br>2. அழுக்காறு, அவா, வெகுளி ஆகியவை சமரச ஞானியாக்குவதில்லை.<br>3. சமரசத்தைப் பற்றிப் பேசுவதும் எழுதுவதும் எளிது<br>4. நடைமுறைப்படுத்துவது அரிது.<br>5. நடைமுறையில் கொண்டுவர முயல்வதே அறிவுடைமை. | 4 |
| 3. | <u>கவிதைக்குரிய நல்லியல்புகள்</u><br>1. கவிதை புவியினுக்கு அணி செய்வதாய் இருத்தல்.<br>2. மெய்ப்பொருள் தந்து அறிவு இது எனச் சுட்டல்.<br>3. எல்லாத் துறைகளையும் பெறுதல்.<br>4. ஐந்திணை ஒழுக்கம் தழுவுதல்.<br>5. அழகுறத் தெளிந்து, மனம் குளிர்ந்து இயங்குதல்.<br>**(கருத்து / பாடல் மட்டும் எழுதியிருப்பின் உரிய மதிப்பெண் வழங்கலாம்)** | 4 |
| 4 | <u>பெரிய முயற்சியையே மதித்தனர்</u><br>1. வயலில் விளைந்து கிடக்கும் நெற்பயிரை எலி கறித்துத் தன் வளைக்குள் சேர்ப்பது எளிய முயற்சி இதுபோல் எளிய முயற்சியைப் பழந்தமிழர் அருவருத்தனர்.<br>2. இடப்பக்கத்தில் வீழ்ந்து கிடக்கும் பன்றியைப் பாராமல் பெரிய யானையை வலப்பக்கத்தில் வீழ்த்தி, உணவாய்க் கொள்கின்ற புலியைப் போன்ற பெரும் முயற்சியை மக்கள் மதித்தனர்.<br>3. பெரிது முயன்று தேடும் பொருளையே தமக்குரியதாய்க் கருதினர்.<br>4. எளிய முயற்சியில் வருவதை மேன்மையாக மதிக்கவில்லை. | 4 |
| 5. | <u>நாடு என்னும் பற்றால் சமரசத்தை இழத்தல்</u><br>1. தன்நாட்டுப் பற்றால் பிற நாட்டாரை வருத்துதல்.<br>2. ஆகாய விமானங்களையும், நீர் மூழ்கிக் கலங்களையும், நச்சுக்காற்றையும் பிறரை வருத்தப் பயன்படுத்துதல்.<br>3. பிறநாட்டாரிடமும், கடவுள் இருத்தல்.<br>4. அவர்களுக்கும் பசி உண்டு என்பதை உணர்தலில்லை.<br>5. சகோதர உணர்வு இன்றி சமரசத்தை இழத்தல். | 4 |

| II | எவையேனும் மூன்றிற்கு மட்டும் | 3×4=12 |
| --- | --- | --- |
| 6. | **மக்கள் நாகரிகத்தோடு மாட்டிற்கும் தொடர்புண்டு**<br>1. மக்கள் நாகரிகம் குறிஞ்சி, முல்லை, மருதம், நகரம் என நான்கு நிலைகளைத் தழுவியது.<br>2. குறிஞ்சியிலேயே தமிழர்க்கும், முன்னோர்க்கும் ஆவோடு தொடர்பு இருந்திருத்தல் வேண்டும்.<br>3. குறிஞ்சியை அடுத்த முல்லை நிலத்தில் வாழ்ந்த ஆயர் ஆட்டையும் மாட்டையும் பெரிய அளவில் வளர்த்தனர்.<br>4. ஆவின் ஊனையும் பாலையும் உண்டு வாழ்ந்தனர்.<br>5. ஆவை மேய்ப்பவர் ஆயர் எனப் பெயர் பெற்றனர். | 4 |
| 7. | **நீதி நூல்களின் பொதுவான இயல்பு**<br>1. நீதிகளைக் கூற எழுந்தவை நீதி நூல்கள்.<br>2. இவ்வாறு நடத்தல் வேண்டும் என்று விதித்தும், இவ்வாறு நடத்தல் கூடாது என்று விலக்கியும் செல்வதே நீதி நூல்களின் பொதுவான இயல்பு.<br>3. நீதி நூல்களின் இலக்கிய நயமும், கவிநயமும் அரிதாகத்தான் காணப்படும்.<br>4. மக்களின் வாழ்க்கையைச் சீர்ப்படுத்தவும் மேம்படுத்தவும் எழுந்தவை நீதி நூல்கள். | 4 |
| 8. | **ஒரு படி முன்னேற்றம் என்று மு.வ.உரைப்பது**<br>1. முடியும் கோலும் சிறப்பாய் இருந்த காலத்தில் அவற்றைக் காப்பதற்காகப் படைகளும் படைக்கருவிகளும் பயன்பட்டன.<br>2. இன்றைய ஆட்சி முறையிலும் படைகளும் படைக்கருவிகளும் அவ்வாறே பயன்படுகின்றன.<br>3. அவற்றின் மதிப்பும் சிறப்பும் குறைந்து வருகின்றன.<br>4. இன்றைய மக்கள், செய்தி இதழ்களில் எழுதப்படுவனவும் மேடைகளில் பேசப்படுவனவும் உண்மை அல்ல என்னும் தெளிவு பெற வேண்டும்.<br>5. மக்கள் அத்தெளிவினால் போர்ப்படைகளைக் கண்டு மயங்காததைப் போன்றே கட்சித் தேர்தல்களையும் கண்டு மயங்க மாட்டார்கள். | 4 |
| 9. | **செப்புத் திருமேனிகளின் பொற்காலம்**<br>1. செப்புத் திருமேனிகளின் பொற்காலம் சோழர் காலம் ஆகும்.<br>2. சோழர் காலத்தில்தான் அதிக எண்ணிக்கையில் செப்புத்திருமேனிகள் செய்யப்பட்டிருக்கின்றன.<br>3. செம்பியன் மாதேவி போன்ற சோழப் பேரரசிகள் செப்புத்திருமேனிகள் செய்தளிப்பதைத் தாம் பிறந்ததன் பயனாக எண்ணினர்.<br>4. சோழர் காலத்துச் செப்புத்திருமேனிகள் கலை அழகும் கடவுள் தன்மையும் கொண்டு மிளிர்பவை.<br>5. ஆகம நூல்களில் எவ்வாறு குறிக்கப்பெற்று உள்ளனவோ அவ்வாறே சிவன் மூர்த்தங்களும் திருமால் மூர்த்தங்களும் செய்யப்பட்டுள்ளன. | 4 |

| | | |
|---|---|---|
| 10. | **<u>ஆவின் சிறப்புகள்</u>**<br>1. ஆவும் ஆவேறும் மக்களுக்குப் பயன்படுவன.<br>2. அவற்றுள் ஆவே அமைதி உடையது; அமுதளிப்பது; இருபால் கன்று ஈனுவது.<br>3. பார்த்தால் பசு போல, பாய்ந்தால் புலி போல.<br>4. ஆவுக்கு வாயுறை அளித்தல் – அறக்கொடை.<br>5. பாழாய்ப் போகிறது பசுவின் வாயிலே.<br>6. தலை மாணாக்கருக்கு உவமை.<br>7. ஆவுரிஞ்சி, ஆதீண்டு குற்றி – தறிகள் நடப்பட்டிருந்தன. | 4 |
| III | **எவையேனும் ஒன்றனுக்கு மட்டும்** | 1×6=6 |
| 11. | **<u>தமிழ் – உயர்தனிச் செம்மொழி</u>**<br>**உயர் மொழி**<br>1. தான் வழங்கும் நாட்டிலுள்ள பல மொழிகளுக்குத் தலைமையும் அவற்றின் மிக்க மேன்மையுள்ள மொழியே உயர்மொழி<br>2. தமிழ் மொழியானது தெலுங்கு முதலிய மொழிகளுக்கு எல்லாம் தலைமையும் மேன்மையும் உடைமையால் அஃது உயர்மொழியே.<br>**தனிமொழி**<br>3. தமிழ் தனித்து இயங்கவல்ல ஆற்றல் சான்ற தனி மொழியாகும்.<br>4. பிறமொழிகளின் உதவி இல்லாமல், சிறிதும் இடர்ப்பாடு இல்லாமல், தனித்து இயங்க வல்லதாகும்.<br>**செம்மொழி**<br>5. திருந்திய பண்பும் சீர்த்த நாகரிகமும் பொருந்தி தூய மொழியாய் அமைந்திருக்கிறது.<br>6. தமிழில் இடர்ப்பட்ட சொல் முடிபுகளும் பொருள் முடிபுகளும் இல்லை.<br>7. சொல்லுபவன் கருதிய பொருளைக் கேட்பவன் தெளிவாய் உணரக்கூடியதாய் இருக்கிறது.<br>8. பழையன கழிந்தும் புதியன புகுந்தும் திருத்தம் அடைந்துள்ளது.<br>**தூய மொழி**<br>9. தமிழில் நாகரிக முதிர்ச்சிக்கு ஏற்பச் சொற்கள் தோன்றியுள்ளன. அவற்றுள் பிற மொழிச் சொற்களல்லாமல் தமிழ்ச் சொற்களே மிகுந்துள்ளன. எனவே, தமிழ் உயர்மொழி, தூய மொழியாகும். அதனால் தமிழ் "செம்மொழி" என்பது உறுதி. | 6 |

| | | |
|---|---|---|
| 12. | **<u>கோயிற் கட்டடக் கலை</u>**<br>1. கட்டடக் கலையென்றாலே கோவில் கட்டடக் கலையைத்தான் கூற முடிகிறது.<br>2. பூம்புகார் அகழ்வாய்வில் புத்தவிகாரம், முகத்துவாரக் கட்டடம் கண்டுபிடிக்கப்பட்டன.<br>3. கற்களை அடுக்கி அமைக்கும் பணி பாண்டியர் காலம் முதல் இன்று வரை தொடர்கிறது.<br>4. <u>பல்லவர் காலம்</u> – மாமல்லபுரக் கடற்கரைக் கோவில், காஞ்சி கைலாச நாதர் கோவில்.<br>5. <u>பாண்டியர் காலம்</u> – திருப்பத்தூர் திருத்தளிநாதர் குடைவரைக் கோயில் – பிள்ளையார்ப்பட்டி.<br>6. <u>சோழர் காலம்</u> – நார்த்தாமலை, விசயாலய சோழீச்சுரம், தஞ்சைப் பெருவுடையார், கங்கை கொண்ட சோழீச்சுரம், தாராசுரம் ஐராவதேசுவரர், திரிபுவன வீரேச்சுரம்.<br>7. பல்லவர் காலத்தில் தொடங்கிய கோவில்களில் கோபுரம் அமைத்தல்.<br>8. பிற்காலப் பாண்டியர், விசய நகர மன்னர் காலங்களிலும் இக்கலை உன்னத நிலை அடைந்தது. | 6 |
| IV. | துணைப்பாடம் (இரண்டனுக்கு மட்டும்) | 2×10=20 |
| 13 | **<u>இரண்டு பக்க அளவில் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் எழுதுதல் வேண்டும்.</u>**<br>பத்திப்பிரிவு – உட்தலைப்பு – கதைமாந்தர் –பெயர்கள் சரியாக எழுதுதல் வேண்டும்.<br>முன்னுரை,முடிவுரை – 2மதிப்பெண்கள்<br>கதை ஆசிரியர் பெயர், கருப்பொருள், கதைச்சுருக்கம்,உட்தலைப்பு – 8மதிப்பெண்கள்<br><br>**<u>மண்</u>**<br>**<u>ஆசிரியர் : அய்க்கண் :</u>**<br>சூரப்பட்டி விழாக்கோலம் – ராமாயி,கருப்பையா தம்பதியின் வறுமை – பெண்சிசுக் கொலை – தத்துக்கொடுத்தல்–சின்னத்தாயி வருகை – ரிச்சர்ட்,லிஸி தம்பதியின் தமிழ்ப்பற்று – விருந்தோம்பல் – வறுமையில் செம்மை.<br>**(அல்லது)**<br>**<u>கிழிசல்</u>**<br>**<u>ஆசிரியர் : நாஞ்சில் நாடன் :</u>**<br>சுசீந்தரம் கோயில் திருவிழா – இசை நிகழ்ச்சிகள் –சிறுவன் மாணிக்கம் – மாணிக்கத்தின் தந்தை – மாணிக்கத்தின் ஆசை – திருவிழா காணச் செல்லுதல் – பகவதி விலாஸ் உணவு விடுதி – தந்தை செயல் – மாணிக்கத்தின் தீர்மானம்.<br>**(அல்லது)**<br>**<u>நாடகமாக்கல்</u>**<br>நாடகஅமைப்பு – 5 மதிப்பெண்கள்<br>நாடக வடிவில் எழுதுதல் – 5 மதிப்பெண்கள்<br><u>குறிப்பு :</u> (நாடகவடிவில் எழுதாமல் கதை சுருக்கமாக எழுதியிருப்பின் 5 மதிப்பெண்கள் வழங்கலாம்) | |

| | | |
|---|---|---|
| | **(அல்லது)** | |
| | **பழிக்குப்பழி**<br>**ஆசிரியர் : த.நா.சேனாதிபதி**<br>அண்ணனின் குடும்பம் – கிட்டுவின் படிப்பு – கிட்டு, ராமநாதன் சேர்க்கை – கிட்டுவின் நடத்தையில் மாற்றம் – கிட்டுவின் அறையில் சத்தம் – அண்ணன் கிட்டுவைத் தேடுதல் – நாடக ஒத்திகை – அண்ணன் உண்மை உணர்தல்.<br>**(அல்லது)**<br>**ஓர் உல்லாசப்பயணம் :**<br>**ஆசிரியர் : வண்ணதாசன்**<br>தந்தை மகன் உல்லாசப்பயணம் பற்றி உரையாடல் – தந்தையின் வருத்தம் – மழை வருதல் – தங்கையை அழைத்து வர பள்ளிக்குச் செல்லல்– தட்டோடி வடிகால் மழை நீரில் குளித்தல். | |
| 14. | முன்னுரை,முடிவுரை, மனம் கவர்ந்த கதை மாந்தர் – 3 மதிப்பெண்கள்<br>கதைச்சுருக்கம் – 2 மதிப்பெண்கள்<br>கதைப்போக்கு, மாந்தர் பண்புகளை விளக்குதல் – 5 மதிப்பெண்கள்<br>குறிப்பு : (கதை மாந்தர் திறனாய்வைக் கதையாக எழுதியிருப்பின் 5 மதிப்பெண்கள் வழங்கலாம்)<br>**சட்டை**<br>**ஆசிரியர் : ஜெயகாந்தன்**<br>சிவன் கோவிலில் துறவி – பூந்தோட்டத்துச் சாமியாரின் கடமை – சேவை மனப்பான்மை – பட்டாளத்தார் செய்தி வாசித்தல் – கோயிலில் சொற்பொழிவு – பூந்தோட்டத்துச் சாமியாரின் மனமாற்றம் – இராணுவத்தில் சேருதல்.<br>**(பண்புநலன்கள் குறிப்பிட்டு இருப்பின் சிறப்பு)**<br>**(அல்லது)**<br>**வேலி**<br>**ஆசிரியர் : ராஜம் கிருஷ்ணன்**<br>மாலதி – வேலி தாண்ட முடியவில்லை – மனக்குமுறல் – மாலதியின் தமக்கை வருகை – மாலதியின் வேலியும் முள்ளும்.<br>**(பண்புநலன்கள் குறிப்பிட்டு இருப்பின் சிறப்பு)**<br>**(அல்லது)**<br>**கட்டுரை வரைதல்**<br>முன்னுரை, முடிவுரை – 2 மதிப்பெண்<br>கட்டுரைப் பகுதி – 8 மதிப்பெண்<br>பிள்ளைகளால் கைவிடப்பட்ட முதியோரின் மனநிலை – முதியோர் இல்லத்தில் அவர்களின் நிலை ஆகியவற்றை உட்தலைப்புகளிட்டு கட்டுரையாக்க வேண்டும்.<br>**(அல்லது)**<br>வினாவிற்குத் தகுந்தாற் போல நாட்டு வழக்கம், ஊர் மரபுகளை எழுதியிருப்பின் மதிப்பெண்கள் வழங்கலாம்<br>**(மூக்கப்பிள்ளை வீட்டு விருந்து கதை எழுதியிருப்பின் 5 மதிப்பெண் வழங்கலாம்.)** | |

| | | |
|---|---|---|
| V | **இலக்கிய நயம் பாராட்டல்** | **1×10=10** |
| 15. | முன்னுரை, முடிவுரை, தலைப்பு<br>திரண்ட கருத்து, மையக்கருத்து<br>தொடை நயம் (எதுகை, மோனை, இயைபு, முரண்)<br>அணி, ஓசை, சுவை, சந்தம், சொல்நயம், பொருள்நயம் **(ஏதேனும் மூன்று)**<br>**குறிப்பு**<br>அணி – சொற்பொருள் பின்வருநிலையணி<br>சுவை – வெகுளிச் சுவை / இழிவுச்சுவை /அவலச்சுவை<br>சந்தம் – சிந்துப்பா<br>ஓசை – செப்பலோசை,<br>**(முன்னுரை, முடிவுரை, திரண்ட கருத்து, எதுகை, மோனை மட்டும் எழுதி இருப்பின் 6 மதிப்பெண்களுக்குள் வழங்கலாம்)** | 2<br>2<br>2<br>4 |
| VI . | தமிழாக்கம் – **(மூன்று மட்டும்)** | **3×2=6** |
| 16. | சிறு துளி பெரு வெள்ளம். | |
| 17. | ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு. | |
| 18. | அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு. | |
| 19. | சித்திரமும் கைப்பழக்கம். | |
| 20. | அனுபவமே சிறந்த ஆசான் / பயிற்சியே ஒருவனை முழுமனிதனாக்கும். | |
| 21. | நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். | |
| | • தொடர்புடைய பழமொழி எழுதியிருப்பின் முழு மதிப்பெண்கள் வழங்கலாம். | |
| VII . | **பழமொழிகளுள் ஒன்றை வாழ்க்கை நிகழ்வோடு கூறுதல்** | **1×4=4** |
| 22. | பழமொழி விளக்கம்– 1 மதிப்பெண்<br>ஏற்புடைய வாழ்க்கை நிகழ்வு,கதை நிகழ்வு – 3 மதிப்பெண்கள்<br>**(குறிப்பு– வாழ்க்கை நிகழ்வின்றி கருத்து மட்டும் விளக்கப்பட்டிருந்தால் 2 மதிப்பெண்கள் வழங்கலாம்)**<br>**(அல்லது)**<br>கவிதை எழுதுதல்<br>தலைப்பு– மழை அல்லது வாய்மை<br>**குறிப்பு– 1. மரபுக்கவிதை/புதுக்கவிதையாக இருக்கலாம்.**<br>**2. பிறமொழிக் கலப்பு இன்றிச் சொந்தப் படைப்பாக இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்.** | |
| | **காதுகேளாத மாணவர்களுக்கான மாற்றுவினா (ஐந்து மட்டும்)**<br>இவ்வினா எழுதப்பட்டிருந்தால் 16 முதல் 22 வரை உள்ள வினாக்களுக்கு ஏற்கனவே மதிப்பெண் வழங்கப்படாததை உறுதி செய்து கொண்டு மதிப்பெண் வழங்க வேண்டும். | **(5 ×2 =10)** |
| 16. | சீவகனுக்கு மகள் மனோன்மணி | |
| 17. | இரகசிய வழி | |
| 18. | ஐந்து அங்கங்கள் | |
| 19. | இருபது காட்சிகள் | |
| 20. | பேராசிரியர் பெ.சுந்தரம்பிள்ளை | |
| 21. | சிவகாமி சரிதம் | |
| 22. | ஆலப்புழை. | |

| | | |
|---|---|---|
| VIII | அடைப்புக் குறிகளுக்குள் உள்ளவாறு விடையெழுதுதல். | 10×1 = 10 |
| 23. | ஒவ்வொரு சிற்றூரிலும் ஊராட்சி உள்ளது. | |
| 24. | வேட்டுவப் பெண்கள் விளையாடப் போவதுண்டு என்று சஞ்சீவிபர்வதத் சாரல் பாடுகிறது. | |
| 25. | சோறு கொதிக்கிறது. போ தம்பி தணலைக் குறை என்றவுடன் சென்று பார்த்தான். | |
| 26. | 'தொலைக்காட்சியில் தொடர்களைப் பார்க்காவிட்டால் வாழ்க்கையே வெறுத்துவிடும் / சலிப்படைந்து விடும். ' என்கிறார் தாத்தா. | |
| 27. | ஒருவன் ஒன்றியாய்ப் / தனியாய்ப் போனால் அது ஊர்வலமா? | |
| 28. | நெல்வயலில் களை பறித்த போது அரவு கடித்ததால் அலறினாள். | |
| 29. | கரும்புத் தோட்டத்திற்கு / கருப்பங் கொல்லைக்கு அருகில் நாய் குரைத்தது. | |
| 30. | பயணி பயணத்தை விலக்கியவுடன் பணம் திரும்பத் தரப்பட்டது | |
| 31. | அரண் – மதில், பாதுகாப்பு, கோட்டை<br><br>அரன் – சிவன்<br>(அல்லது)<br>வால் – விலங்கின் உறுப்பு, வெண்மை<br>வாள் – ஆயுதம் , ஒளி பொருந்திய<br><br>(பொருள் வேறுபாட்டை உணர்த்தும் வகையில் தனித்தனி வாக்கியங்களில் அமைந்தால் மட்டும் முழு மதிப்பெண் வழங்குக)<br><br>(பொருள் மட்டும் எழுதப்பட்டிருப்பின் 1/2 மதிப்பெண் வழங்கலாம்) | |
| 32. | ''கவிதை இது அல்ல, இது அல்ல, என எளிதில் கூறிவிடலாம். ஆனால், இன்னது தான் கவிதை என்று வரையறுத்தல் எளிதல்ல'' என்று ஜான்ஸன் பதில் கூறினாராம். | |